# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## மூன்றாம் திருமொழி - கரையெடுத்த
## திருக்கண்ணபுரம் 3
## [தலைமகனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்; அறத்தொடு நிற்றல்]

** கரை எடுத்த சுரிசங்கும் * கன பவளத்து எழுகொடியும் *
திரை எடுத்து வருபுனல் சூழ் * திருக்கண்ணபுரத்து உறையும் **
விரை எடுத்த துழாய் அலங்கல் * விறல் வரைத் தோள் புடை பெயர *
வரை எடுத்த பெருமானுக்கு * இழந்தேன் என் வரிவளையே 1

அரி விரவு முகில் கணத்தால் * அகில் புகையால் வரையோடும் *
தெரிவரிய மணிமாடத் * திருக்கண்ணபுரத்து உறையும் **
வரி அரவின்னணைத் துயின்று * மழை மதத்த சிறு தறு கண் *
கரி வெருவ மருப்பொசித்தாற்கு * இழந்தேன் என் கனவளையே 2

துங்க மாமணி மாட * நெடு முகட்டின் சூலிகை போம் *
திங்கள் மாமுகில் துணிக்கும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
பைங்கண் மால் விடை அடர்த்துப் * பனி மதி கோள் விடுத்துகந்த *
செங்கண்மால் அம்மானுக்கு * இழந்தேன் என் செறிவளையே 3

கண மருவு மயில் அகவு * கடிபொழில் சூழ் நெடு மறுகில் *
திண மருவு கனமதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து உறையும் **
மண மருவு தோள் ஆய்ச்சி * ஆர்க்கப் போய் உரலோடும் *
புணர் மருதம் இற நடந்தாற்கு * இழந்தேன் என் பொன்வளையே 4

வாய் எடுத்த மந்திரத்தால் * அந்தணர் தம் செய் தொழில்கள் *
தீ எடுத்து மறை வளர்க்கும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
தாய் எடுத்த சிறு கோலுக்கு * உளைந்தோடித் தயிர் உண்ட *
வாய் துடைத்த மைந்தனுக்கு * இழந்தேன் என் வரிவளையே 5

மடல் எடுத்த நெடுந்தாழை * மருங்கெல்லாம் வளர் பவளம் *
திடல் எடுத்துச் சுடர் இமைக்கும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
அடல் அடர்த்து அன்று இரணியனை * முரண் அழிய அணி உகிரால் *
உடல் எடுத்த பெருமானுக்கு * இழந்தேன் என் ஒளிவளையே 6

வண்டமரும் மலர்ப் புன்னை * வரி நீழல் அணி முத்தம் *
தெண்திரைகள் வரத் திரட்டும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
எண்திசையும் எழுசுடரும் * இருநிலனும் பெருவிசும்பும் *
உண்டுமிழ்ந்த பெருமானுக்கு * இழந்தேன் என் ஒளிவளையே 7

கொங்கு மலி கருங்குவளை * கண்ணாகத் தெண்கயங்கள் *
செங்கமல முக மலர்த்தும் * திருக்கண்ணபுரத்து உறையும் **
வங்க மலி தடங்கடலுள் * வரி அரவின் அணைத் துயின்ற *
செங்கமல நாபனுக்கு * இழந்தேன் என் செறிவளையே 8

வாராளும் இளங்கொங்கை * நெடும் பணைத் தோள் மடப் பாவை *
சீராளும் வரை மார்பன் * திருக்கண்ணபுரத்து உறையும் **
பேராளன் ஆயிரம் பேர் * ஆயிர வாய் அரவணை மேல் *
பேராளர் பெருமானுக்கு * இழந்தேன் என் பெய்வளையே 9

** தே மருவு பொழில் புடை சூழ் * திருக்கண்ணபுரத்து உறையும்
வாமனனை * மறிகடல் சூழ் * வயலாலி வளநாடன் **
காமரு சீர்க் கலிகன்றி * கண்டுரைத்த தமிழ் மாலை *
நா மருவி இவை பாட * வினையாய நண்ணாவே 10

**அடிவரவு:** கரை அரி துங்கம் கணம் வாய் மடல் வண்டு கொங்கு வாராளும் தேமருவு விண்ணவர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**